DMCOURTKUNNAM

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 182 /2021**

2025- ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25 ம் நாள் வெள்ளிகிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெருமாள் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ராஜு | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | பேரளி | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 43 /2025 |

**2 முதல் 4 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. தாவா வழக்கு போட விபரங்கள் சொன்னது யார் என்றால் எனது அம்மாவும் நானும் தான் சொன்னோம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதன்மை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொன்னது என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். பேரளி வடக்கு புல எண். 181/11B1 மற்றும் 181/11B2 ஆகும். வழக்குடைய வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் படகாத்து உடையாருக்கு 33 சென்ட். படகாத்து உடையாரிடம் இருந்து எனது அம்மா 1986 ம் ஆண்டு 17 சென்ட் கிரையம் வாங்கினார். மீதி இருந்த 16 சென்ட் நிலத்தை படகாத்து உடையார் தானசெட்டில் மென்ட்டாக தனது மகள் சுசீலாவிற்கு எழுதி கொடுத்துள்ளார். 16 சென்ட் என்பதற்கு பதிலாக 16 $^{1/2}$ சென்ட் என்று எழுதி கொடுத்துள்ளார்.

2. மேற்படி சுசீலாவிற்கு 1/2 சென்ட் கூடுதலாக எழுதி கொடுத்தது எப்போது தெரியும் என்றால் 2013 ம் ஆண்டு தான் தெரியும். கூடுதலாக உள்ள நிலத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்தாரா என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததால் மேற்கொண்டு விசாரணை நடைபெறவில்லை. 1986 ம் ஆண்டே எனது அம்மா கிரயம் பெற்ற பிறகு மேற்படி சொத்திற்கு ஏன் உட்பிரிவு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனது அம்மாவிற்கு படிக்க தெரியாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. சுசீலா உட்பிரிவு செய்தாரா என்றால் அவர் உட்பிரிவு செய்யும்போது தவறுதலாக சட்டத்திற்கு புறம்பாக எனது நிலத்தில் 1/2 சேர்த்து 17 சென்ட் என்று உட்பிரிவு செய்துள்ளார்.

3. சுசீலாவின் தானசெட்டில்மென்ட்டில் நான்கெல்லையில் கீழ்புறம் யார் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ராசு என்று எனது தகப்பனார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சுசீலா 1–ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதி கொடுத்துள்ளார். அந்த பத்திரத்திலும் கீழ்புறம் எனது தந்தை பெயர்தான் உள்ளது என்றால் சரிதான். எனது

அம்மா கிரயம் பெற்றபோதே எங்களது நிலத்தை உட்பிரிவு செய்திருந்தால் எங்களது பட்டாவில் விஸ்தீரணம் சரியாக இருந்திருக்கும் என்றால் சரிதான். எனது தாய் தந்தைக்கு படிக்க தெரியாததால் உட்பிரிவு செய்யவில்லை. நான் பட்டாவில் திருத்தம் செய்ய நாங்கள் எந்த மனுவும் 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. மேற்படி வருவாய்துறையில் முறையாக மனு அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் உத்தரவிட்டால் மேற்படி 2 முதல் 4 பிரதிவாதிகள் பரிசீலிக்க தயாராக இருக்கிறார்கள். தாவா வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**வாதி தரப்பு மறு விசாரணை**</u> :- இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JM COURT, KUNNAM